‘பைக் டாக்சி’க்கு தடை கோரி ஆட்டோ ஓட்டுனர்கள் பேரணி

சென்னை, டிச. 20–

ஆட்டோ கட்டணத்தை மாற்றியமைக்க வேண்டும்; ‘பைக் டாக்சி’களுக்கு தடை விதிக்க வேண்டும்; ஆட்டோ பயணியருக்காக புதிய செயலி துவங்க வேண்டும் என்பது உட்பட, ஐந்து அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி, சென்னை எழும்பூர் லேங்க்ஸ் தோட்டச்சாலையில் இருந்து கோட்டை நோக்கி, ஆட்டோ ஓட்டுனர்கள் பேரணியாக புறப்பட்டனர். 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

இதுகுறித்து, அனைத்து ஆட்டோ தொழிற்சங்க கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் பாலசுப்பிரமணியம் கூறியதாவது:

கடந்த 2022ல், பைக் டாக்சி மற்றும் அதற்கான செயலிக்கு உயர் நீதிமன்றத்தில் தடை விதிக்கப்பட்டது. பின், ஆறு மாதத்தில் மேல்முறையீட்டு வழக்கில் செயலிக்கான தடை விலக்கப்பட்டது. ஆனால், பைக் டாக்சிக்கான தடை அப்படியே இருக்கிறது.

அண்மையில் வழக்கு விசாரணையின் போது கூட, பைக் டாக்சியில் பயணித்த, 189 பேருக்கு காப்பீட்டை பெற்றுத் தர முடியாததால், பைக் டாக்சியை தடை செய்ய வேண்டும் என, போக்குவரத்துத் துறை கூறியுள்ளது. ஆனால், போக்குவரத்து துறை அமைச்சரோ, தடையில்லை என்கிறார். பைக் டாக்சியால் ஐந்து லட்சம் ஆட்டோ ஓட்டுனர்களின் வாழ்வு கேள்விக்குறியாகி உள்ளது.

ஆட்டோ கட்டணம் நிர்ணயம் தொடர்பான கோப்பு, முதல்வரின் மேஜையில் இருப்பதாக கூறுகின்றனர். நான்கு ஆண்டுகளாக, ஒரு கோப்பு முதல்வரின் மேஜையில் இருக்குமா? இதுகுறித்து பேச்சு நடத்த, 23ம் தேதி போக்குவரத்து ஆணையர் அழைத்துள்ளார்.

இவ்வாறு அவர் கூறினார்.

நிலத் தகராறில் கத்திக்குத்து விவசாயிக்கு 8 ஆண்டு சிறை

உளுந்துார்பேட்டை, டிச. 20–

உளுந்துார்பேட்டை அருகே நிலத் தகராறில் ஒருவரை கத்தியால் குத்திய வழக்கில் விவசாயிக்கு 8 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்துார்பேட்டை அடுத்த ஆசனூரைச் சேர்ந்தவர் பாபு, 55; அதே பகுதியைச் சேர்ந்தவர் பிரகாஷ், 56; விவசாயிகளான இருவருக்கும் இடையே நிலத் தகராறில் முன்விரோதம் இருந்தது.

கடந்த 2016ம் ஆண்டு அக்டோபர் 23ம் தேதி இருவருக்கும் இடையே மீண்டும் தகராறு ஏற்பட்டது. இதில், பிரகாஷ், பாபுவை கத்தியால் தாக்கி கொலை மிரட்டல் விடுத்தார். படுகாயமடைந்த பாபு புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றார்.

■ கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்துார்பேட்டை அருகே சக விவசாயியை கத்தியால் குத்திய வழக்கில் 8 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்ட பிரகாஷ். (முழு கை வெள்ளை சட்டை அணிந்திருப்பவர்)

புகாரின் பேரில், எடைக்கல் போலீசார் வழக்கு பதிந்து பிரகாஷை கைது செய்தனர். இந்த வழக்கு விசாரணை, உளுந்துார்பேட்டை சார்பு நீதிமன்றத்தில் நடந்து வந்தது.

அரசு வழக்கறிஞர் இளமுருகன் ஆஜரானார். வழக்கை விசாரித்த நீதிபதி ஆறுமுகம் நேற்று தீர்ப்பளித்தார். அதில், பிரகாஷுக்கு 8 ஆண்டு சிறையும், 11 ஆயிரம் ரூபாய். அபராதமும் விதித்து தீர்ப்பு அளித்தார். பிரகாஷ் கடலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

பஸ்சில் பெண்ணிடம் நகை, பணம் திருட்டு

விருத்தாசலம், டிச. 20–

விருத்தாசலத்தில் ஓடும் பஸ்சில் பெண்ணிடம் 1 சவரன் காசு மற்றும் ரூ.5 ஆயிரம் பணத்தை திருடிச் சென்ற மர்மநபர்கள் குறித்து போலீசார் விசாரித்து வருகின்றனர்.

விருத்தாசலம் தெற்கு பெரியார் நகரைச் சேர்ந்தவர் ராமலிங்கம் மனைவி உஷா. இவர் நேற்று மாலை 4:00 மணியளவில் விருத்தாசலம் கடை வீதியில் உள்ள நகை கடையில், 1 பவுன் தங்க காசு வாங்கினார். பின்னர், கடை வீதியில் இருந்து திட்டக்குடி – விருத்தாசலம் பஸ்சில் ஏறி பஸ் நிலையம் வந்து, இறங்கினார்.

அப்போது, அவரது பையில் வைத்திருந்த 1 சவரன் காசு மற்றும் ரூ.5 ஆயிரம் பணத்தை மர்மநபர்கள் திருடிச் சென்றது தெரிய வந்தது. புகாரின் பேரில் விருத்தாசலம் போலீசார் விசாரித்து வருகின்றனர்.

கல்வராயன்மலையில் கஞ்சா சாகுபடி செய்த 2 பேர் கைது

கச்சிராயபாளையம், டிச. 20–

பருவதம்

கோவிந்தன்

கல்வராயன்மலையில் கஞ்சா செடி சாகுபடி செய்த 2 பேரை போலீசார் கைது செய்தனர்.

போதைப் பொருள் நடமாட்டத்தை தடுக்க, கள்ளக்குறிச்சி மாவட்டம், கல்வராயன்மலையில் சிறப்பு அதிரடிப்படையினர் தொடர் சோதனை மேற்கொண்டு வருகின்றனர். நேற்று இன்ஸ்பெக்டர் ஏழுமலை தலைமையிலான அதிரடிப்படை போலீசார் கல்வராயன்மலையில் உள்ள பெருமாநத்தம் கிராமத்தில் சோதனை நடத்தினர்.

அங்குள்ள வனப்பகுதியில் 1,600 கஞ்சா செடிகள் சாகுபடி செய்து இருப்பது தெரியவந்தது. கஞ்சா செடி சாகுபடி செய்த அதே பகுதியைச் சேர்ந்த முனியன் மகன் பருவதம், 43; பூஞ்சோலைமகன் கோவிந்தன், 32; ஆகிய இருவரையும் கைது செய்தனர். 100 கிலோ கஞ்சா செடிகளை பறிமுதல் செய்தனர்.

ஆடு திருடிய 3 பேர் கைது

அழகப்பன்

முத்துராயர்

சுரேஷ்

சின்னசேலம், டிச. 20–

வி.மாமந்துார் கிராமத்தில், ஆடுகள் திருடிய 3 பேரை போலீசார் கைது செய்தனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் அடுத்த கீழ்குப்பம் சப் இன்ஸ்பெக்டர் ஹரி கிருஷ்ணன் தலைமையிலான போலீசார் வி.மாமந்துார் பகுதியில் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அந்த வழியாக வந்த காரை நிறுத்தி சோதனை செய்தனர். அதில், காரில் 4 ஆடுகள் இருந்தன. காரில் வந்த 3 பேரிடம் நடத்திய விசாரணையில், புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை அடுத்த சுங்கம்பட்டி அழகப்பன், 55; முள்ளிக்கம்பட்டி முத்துராயர், 36; திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் அடுத்த சோலார்பேட்டை சுரேஷ், 33; என்பதும் தெரியவந்தது.

இவர்கள் புதுக்கோட்டையில் இருந்து தொழுதுார் வழியாக காரில் வரும் போது, வடகராம் பூண்டியில் 2 ஆடுகளும், கொரக்கவாடி மற்றும் வி.மாமந்துார் கிராமங்களில் 2 ஆடுகளையும் திருடி வந்தது தெரிந்தது. மூன்று பேர் மீதும் வழக்குப் பதிந்து கைது செய்து, ஆடுகள் மற்றும் காரை பறிமுதல் செய்தனர்.

இத்தாலி நாட்டு பிரதிநிதிகளுடன் ஆரோவில் செயலர் கலந்துரையாடல்

வானூர், டிச. 20–

ஆரோவில்லில், புதிய திட்டங்கள் கொண்டு வருவதற்கு, இத்தாலி நாட்டு பிரதிநிதிகளுடன் அறக்கட்டளை செயலர் கலந்துரையாடல் நடத்தினார்.

விழுப்புரம் மாவட்டம், ஆரோவில்லில் புதிய திட்டங்களை கொண்டு வரும் முயற்சியில், அறக்கட்டளை நிர்வாகம் இறங்கியுள்ளது. மெய்நிகர் அருங்காட்சியகம் உட்பட ஆரோவில்லில் புதிய திட்டங்கள் தொடர்பாகவும், ஆரோவில் கலாசாரம், ஆன்மிக வளர்ச்சி தொடர்பாக கருத்தரங்கை ‘ஆரோவில் அழைக்கிறது’ தலைப்பில் நேற்று நடத்தியது.

இதில், இத்தாலி நாட்டு பிரதிநிதிகளுடன் அறக்கட்டளை செயலர் ஜெயந்தி ரவி, காணொலி மூலம் கலந்துரையாடி, ஆரோவில் செயல்படுத்தும் முக்கிய திட்டங்களை எடுத்து



■ விழுப்புரம் மாவட்டம், ஆரோவில்லில், புதிய திட்டங்கள் கொண்டு வருவதற்கு, இத்தாலி நாட்டு பிரதிநிதிகளுடன் அறக்கட்டளை செயலர் ஜெயந்தி ரவி நேற்று காணொலி வாயிலாக கலந்துரையாடல் நடத்தினார்.

ரைத்தார்.

குறிப்பாக, பயிற்சி மற்றும் ஆன்லைன் படிப்புகள் மூலம் திறன்மேம்பாட்டை ஊக்குவிக்க மாணவர் பரிமாற்ற நிகழ்வுகள் மற்றும் கலாசார பரிமாற்றம் நடைபெற உள்ளது. சென்னை ஐ.ஐ.டி.,யுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து, பசுமை தொழில்நுட்ப ஆராய்ச்சி மேம்பாட்டில் இணைந்து செயல்பட உள்ளது. அரவிந்தர், அன்னை ஆகியோரின் வாழ்க்கை மற்றும் பணிகளை டிஜிட்டல் அனுபவத்தில் தரும் மெய்நிகர் அருங்காட்சியம் அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஆரோவில் கொள்கைகளை ஊக்குவிக்க முக்கிய இந்திய நிறுவனங்களில் கல்வி பதவிகளை நிறுவவும், கல்வியில் ஆராய்ச்சி திட்டங்களுக்கான வாய்ப்புகளை உருவாக்க உள்ளதாகவும் செயலர் தெரிவித்தார்.

சிறுமியை கொலை செய்த இளைஞருக்கு இரட்டை ‘ஆயுள்’

மயிலாடுதுறை, டிச.20

சீர்காழி அருகே சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்த இளைஞருக்கு இரட்டை ஆயுள் தண்டனை விதித்து மயிலாடுதுறை கோர்ட் தீர்ப்பளித்துள்ளது.

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே காத்திருப்பு பகுதியை சேர்ந்தவர் கல்யாணசுந்தரம்,35. இவர் கடந்த 2019ம் ஆண்டு நவம்பர் 9ம் தேதி, 10ம் வகுப்பு படித்த மாணவி ஒருவரை பலாத்காரம் செய்து கொலை செய்தார்.

திருவெண்காடு போலீசார் போக்சோ வழக்கு பதிந்து கல்யாணசுந்தரத்தை கைது செய்தனர். இவ்வழக்கின் விசாரணை மயிலாடுதுறை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் நடந்து வந்தது. நேற்று இவ்வழக்கை விசாரித்த நீதிபதி விஜயகுமாரி, கல்யாணசுந்தரத்திற்கு இரட்டை ஆயுள் தண்டனை, ரூ.4 ஆயிரம் அபராதம் விதித்து உத்தரவிட்டார்.

சிறுமிக்கு தொல்லை வாலிபருக்கு சிறை

மயிலாடுதுறை, டிச.20

குத்தாலம் பகுதியில் சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த இளைஞருக்கு 10 ஆண்டு சிறை தண்டனை விதித்து மயிலாடுதுறை கோர்ட் தீர்ப்பளித்துள்ளது.

மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் பகுதியை சேர்ந்தவர் சுரேஷ் மேனன்,27. இவர் கடந்த 2020ம் ஆண்டு ஜன. 28ம் தேதி 9 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்துள்ளார்.

சிறுமியின் பெற்றோர் அளித்த புகாரின் பேரில் மயிலாடுதுறை அனைத்து மகளிர் போலீசார் போக்சோ வழக்கு பதிவு செய்து சுரேஷ் மேனனை கைது செய்தனர்.

இந்த வழக்கில் மயிலாடுதுறை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் நேற்று தீர்ப்பளிக்கப்பட்டது. தீர்ப்பில் சுரேஷ் மேனனுக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனை, ரூ. 2 ஆயிரம் அபராதம் விதித்து நீதிபதி விஜயகுமாரி உத்தரவிட்டார். அரசு தரப்பில் வக்கீல் ராம சேயோன் ஆஜரானார்.

கள்ளச்சாராய வழக்கில் கைதான 23 பேரின் நீதிமன்ற காவல் நீட்டிப்பு

கள்ளக்குறிச்சி, டிச. 20–

கள்ளச்சாராய வழக்கில் கைது செய்யப்பட்ட 23 பேரின் நீதிமன்ற காவல், வரும் ஜனவரி 2ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

கள்ளக்குறிச்சி கருணாபுரம், சேஷசமுத்திரம், மாதவச்சேரி ஆகிய பகுதிகளில் மெத்தனால் கலந்த கள்ளச்சாராயம் வாங்கி குடித்ததில் 68 பேர் இறந்தனர். இவ்வழக்கை விசாரித்த சி.பி.சி.ஐ.டி., போலீசார் 24 பேரை கைது செய்தனர். இதில் ஒருவருக்கு ஜாமின் வழங்கப்பட்டது.

கண்ணுகுட்டி (எ) கோவிந்தராஜ், இவரது மனைவி விஜயா, சகோதரர் தாமோதரன், ஷாகுல்அமீது, ராமர், அய்யாசாமி, தெய்வீகன், வேலு உட்பட 23 பேரின் நீதிமன்ற காவல் நேற்று முடிவடைந்தது.

அதை தொடர்ந்து கடலூர் மத்திய சிறையில் உள்ள 23 பேரையும் காணொலி மூலம் கள்ளக்குறிச்சி தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிபதி ஸ்ரீராம் முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்தினர். 23 பேரின் நீதிமன்ற காவலை, வரும் ஜனவரி 2ம் தேதி வரை நீட்டித்து நீதிபதி உத்தரவிட்டார்.

திண்டிவனத்தில் தி.மு.க.,வினர் குஸ்தி

திண்டிவனம், டிச. 20–

திண்டிவனத்தில் தி.மு.க.,வினருக்குள் நடந்த மோதலால் பரபரப்பு நிலவியது.

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் தாலுகா அலுவலகம் எதிரே நேற்று காலை 11:30 மணியளவில் மத்திய அமைச்சர் அமித் ஷாவை கண்டித்து வடக்கு மாவட்ட தி.மு.க., சார்பில் கண்டன ஆர்பாட்டம் நடந்தது.

ஆர்ப்பாட்டம் முடிந்த பிறகு, 29வது வார்டைச் சேர்ந்த தி.மு.க. கவுன்சிலர் அரும்புவின் கணவர் குணசேகருக்கும் அதே வார்டு முன்னாள் கவுன்சிலர் பாஸ்கருக்கும் இடையே ஏற்பட்ட பிரச்னை குறித்து, நகர்மன்ற தலைவரின் கணவரான ரவிச்சந்திரன் மற்றும் நிர்வாகிகள் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடந்தது.

அப்போது, குணசேகருக்கும், பாஸ்கருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

இதில், குணசேகர் தாக்கப்பட்டார். இதனால், அங்கு பரபரப்பு நிலவியது. இந்த சம்பவம் சமூக வலைதளத்தில் வைரலானது.

தன்னை தாக்கி கொலை மிரட்டல் விடுத்ததாக குணசேகர் அளித்த புகாரின் பேரில் இதுகுறித்து திண்டிவனம் டவுன் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

பஸ் கட்டணம் உயர்வு: புதுச்சேரி அரசு அதிரடி

புதுச்சேரி, டிச. 20–

புதுச்சேரியில் கடந்த 6 ஆண்டுகளுக்கு பிறகு பஸ் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. இந்த கட்டண உயர்வு உடனடியாக அமலுக்கு வந்துள்ளது.

இதற்கான அறிவிப்பை, கவர்னர் கைலாஷ்நாதன் உத்தரவின்படி போக்குவரத்துதுறை கூடுதல் செயலர் சிவக்குமார் வெளியிட்டுள்ளார். புதுச்சேரியில் கடந்த 2018ம் ஆண்டிற்கு பிறகு தற்போது பஸ் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது.

அதிகரிக்கப்பட்ட கட்டண விபரம்:

ஏ.சி., வசதி இல்லாத டவுன் பஸ்களுக்கு குறைந்தபட்ச கட்டணம் 5ல் இருந்து 7 ரூபாய் ஆகவும், அதிகப்பட்ச கட்டணம் 13ல் இருந்து 17 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. அதாவது குறைந்த பட்சம் 2 ரூபாய், அதிகபட்சம் 4 ரூபாய் உயர்த்தப்பட்டுள்ளது.

ஏ.சி., டவுன் பஸ் குறைந்தபட்ச கட்டணம் 10ல் இருந்து 13 ஆகவும், அதிகப்பட்ச கட்டணம் 26ல் இருந்து 34 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. அதாவது குறைந்தபட்சம் 3ம், அதிகப்பட்சம் 8 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

டீலக்ஸ் நான் ஏ.சி., பஸ்களுக்கு, ஏ.சி., டவுன் பஸ்களுக்கான கட்டணமே நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதே வேளையில் டீலக்ஸ் ஏ.சி., பஸ்களுக்கு குறைந்தபட்ச கட்டணம் 12ல் இருந்து 16 ஆகவும், அதிகபட்ச கட்டணம் 36ல் இருந்த 47 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

ஏ.சி.. அல்லாத எக்ஸ்பிரஸ் பஸ்கள் புதுச்சேரி எல்லைக்குள் கி.மீ.,க்கு 0.75 பைசா என்பது 0.98 பைசாவாக உயர்த்தப்பட்டுள்ளது. 25 கி.மீ., வரை 20 என, இருந்த குறைந்தபட்ச கட்டணம் 25 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

ஏ.சி., எக்ஸ்பிரஸ் பஸ்கள் புதுச்சேரி எல்லைக்குள் கி.மீ., 1.30 என்பது தற்போது ரூ.1.69 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. முதல் 25 கி.மீ., 50 ரூபாய் வசூலிக்கலாம்.

புதுச்சேரி நகர பகுதிக்குள் ஏ.சி., வால்வோ பஸ் கி.மீ.,க்கு 1.70 என்பது தற்போது 2.21 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. அதாவது, முதல் 30 கி.மீ.,க்கு 54 ஆக இருந்த கட்டணம் தற்போது 70 ரூபாயாக உயர்ந்துள்ளது. இந்த கட்டண உயர்வு உடனடியாக அமலுக்கு வந்துள்ளது.

இந்த கட்டண உயர்வு மூலம் புதுச்சேரி – கடலூர் பஸ் கட்டணம் 20 ரூபாயில் இருந்து 25 ஆக உயர்ந்துள்ளது.

20-ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் : 23.04.1935
மறைவு : 20.12.2005

சௌ. கல்யாணி அம்மாள்
W/o. S.சௌரிராஜலு, வேளாண்மை அலுவலர் (ஓய்வு), சிதம்பரம்.

இன்று உங்கள் நினைவு நாளாயினும்
எங்களுக்கு என்றேன்றும் உங்கள் நினைவு நாளே!
எங்களுக்காவே உழைத்து, எங்களுக்காவே வாழ்ந்து
எங்கள் வாழ்க்கையை வளமாக்கிய எங்கள்
இதய தெய்வத்திற்கு நினைவு அஞ்சலியை சமர்ப்பிக்கின்றோம்...

என்றும் உங்கள் நினைவுகளுடன்

மகன்: K.S. திருமாவளவன் மருமகள்: T. அகிலாவளவன்
பேரன்: S.T. அருள்மொழிவர்மன் பேத்தி: S.T. நந்தினிவளவன்
குறளகம், B-133, ஆறாவது கிராஸ், சிவசக்தி நகர், சிதம்பரம்.

தமிழ்நாடு கிராம வங்கி
TAMIL NADU GRAMA BANK
(A Government owned Bank Sponsored by Indian Bank)
சேத்தியாதோப்பு கிளை
பிற்சேர்க்கை -IV A'' (பார்க்க விதி-9 (1))
அசையாச் சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல அறிவிப்பு - கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 அதனுடன் கடனீட்டு சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 6(2) மற்றும் 8(6)-இன் கீழானது.

இதன் மூலம் பொதுமக்களுக்கும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில் கீழே விவரிக்கப்பட்டுள்ள, ஈடு பெற்றுக் கடனளித்த வங்கியிடம் அடமானம்/அடகு வைக்கப்பட்டுள்ளதும் ஈடு பெற்றுக் கடனளித்த தமிழ்நாடு கிராம வங்கியின் அதிகாரப்பூர்வ அலுவலரால் அடையாள சுவாதீனம் செய்யப்பட்டுள்ளதுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது கடன்தாரர்கள் : 1). திரு.**C.நடராஜன்**, த/பெ. சின்னபிள்ளை, பிள்ளையார் கோவில் தெரு, வடக்கு விருதாங்கன், தெற்கு விருதாங்கன் அஞ்சல், சிதம்பரம் தாலுக்கா, கடலூர் மாவட்டம்-608 305. 2). **ராஜதுரை**, த/பெ. வெங்கடேசன், பிள்ளையார் கோவில் தெரு, வடக்கு விருதாங்கன், தெற்கு விருதாங்கன் அஞ்சல், சிதம்பரம் தாலுக்கா, கடலூர் மாவட்டம்-608 305. 3). **சுமதி,** க/பெ. நடராஜன், பிளாட் எண்.27, AGF பாலாஜி நகர், பார்ட்-3, புழல், திருவள்ளூர்- 600066. ஆகியோரிடம் இருந்து ஈடுபெற்று கடனளித்தவரான தமிழ்நாடு கிராம வங்கி, சேத்தியாதோப்பு கிளைக்கு 16.12.2024 அன்றுள்ளபடி நிலுவையில் இருக்கும் ரூ.4,49,084/- (ரூபாய் நான்கு லட்சத்து நாற்பத்து ஒன்பதாயிரத்து எண்பத்து நான்கு மட்டும்) தொகையை திரும்பப்பெறும் பொருட்டு '' உள்ளது உள்ள இடத்தில்'' ''உள்ளது உள்ளபடி'' மற்றும் '' உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்'' எனும் முறையில் 22.01.2025 அன்று விற்பனை செய்யப்பட உள்ளது.

மின்-ஏலம் மூலம் விற்பனைக்கு கொண்டுவர உத்தேசித்துக்கப்பட்டுள்ள சொத்தின் குறிப்பான விவரங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

அசையாச் சொத்தின் விவரம்

வ எண்.	சர்வே எண்.	பரப்பளவு	இடம் கிராமம், நகராட்சி/ துணை மாவட்டம்/ மாவட்டம்	நான்கு எல்லைகள்
1	ரீ.சர்வே நெ.49/5	200 ச.மீட்டர்	கடலூர் மாவட்டம், சிதம்பரம் பதிவு மாவட்டம், சேத்தியா தோப்பு துணை பதிவு மாவட்டம், தெற்கு விருந்தாங்கன் கிராம பஞ்சாயத்து, வடக்கு விருந்தாங்கன் கிராம நத்தம்.	மொத்தத்தில் VAO சான்றிதழின் படி பாலசிங்கம் இடத்திற்கு கிழக்கு மற்றும் வடக்கு, அழகர்சாமி இடத்திற்கு மேற்கு, சாலைக்கு தெற்கு.
2	ரீ.சர்வே நெ.86/2 (பழைய எண். 46/2B)	65 ச.மீட்டர்		
3	ரீ.சர்வே நெ.49/6 (பழைய எண். 49/3B)	100 ச.மீட்டர்		

சொத்தின் வில்லங்கம்	இல்லை
குறைந்த பட்ச கேட்பு விலை	ரூ.4,50,000/-
டேவணித்தொகை	ரூ.45,000/-
ஏல உயர்வுத் தொகை	ரூ.25,000/-
மின் ஏல தேதி மற்றும் நேரம்	22.01.2025 மதியம் 12.00 மணி முதல் 1.30 மணி வரை
மின் ஏலத்திற்கு சமர்பிக்கவேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம்	21.01.2025 மாலை 5.00 மணிக்கு முன்

இணைய வழி ஏலத்தில் கலந்து கொள்ள எங்கள் e-ஏலம் சேவை வழங்குநரான M/s 4 Closure https://bankauctions.in இணையத்தளத்தை அணுகுமாறு ஏலதாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். தொழில்நுட்ப உதவிகளுக்கு E-ஏல சேவை வழங்குநரை தயவுகூர்ந்து தொடர்பு கொள்ளுங்கள் (திரு. M.தினேஷ் அலைபேசி எண் : 8142000735.

இடம் : சேத்தியாதோப்பு
நாள் : 16.12.2024

அதிகாரப்பூர்வ அலுவலர்
தமிழ்நாடு கிராம வங்கி

கடலூர் பிரின்சிபல் டிஸ்டிரிக் ஜட்ஜ்
கோர்ட்டார் அவர்கள்
GOP: 188/2024
மைனர் சிவானி (வயது 12) சம்மந்தமாக
அமலா, க/பெ. வேணுகோபால்.
எண்.19, மாரியம்மன் கோவில் தெரு,
புதுப்பேட்டை, விருத்தாசலம். – மனுதாரர்
–எதிர்
இல்லை – எதிர்மனுதாரர்
பொது அறிவிப்பு
இந்த நெம்பர் மனுவில் குறிப்பிட்டுள்ள மனு சொத்தானது மைனர் சிவானியின் தந்தையும், மனுதாரரின் கணவருமான வேணுகோபால் அவர்கள் பெயரில் கடந்த 24.12.2018-ம் ஆண்டு விருத்தாசலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரம் மூலம் சுயமாக கிரயம் பெற்று அது முதல் அவரும். மனுதாரர் மற்றும் மனுதாரரின் மகளான மைனர் சிவானி ஆகியோரும் அனுபவம் செய்து வந்த நிலையில் மனுதாரர் கணவரும். மைனரின் தந்தையுமான வேணுகோபால் இறந்துவிட்டதால் மனு சொத்திற்கு மனுதாரரும், மைனர் மகளும் வாரிசுகள் என்ற முறையில் உரிமையானவர்கள். எனவே தற்போது மைனர் மகளின் நலனுக்காக மனுச்சொத்தில் மைனருக்குரியபாகத்தை சேர்த்து விற்பனை செய்ய மனுதாரர் கார்டியன் என்ற முறையில் மனுதாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுவில் வாய்தா 21.01.2025 அன்று வைக்கப்பட்டுள்ளது. மேற்படி மனுவில் யாருக்கேனும் ஆட்சேபணை இருந்தால் வாய்தா அன்று காலை 10:00 மணிக்கு மேற்படி நீதிமன்றத்தில் ஆஜராகி ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது.
மனுதாரர் வழக்குரைஞர்
எஸ்.ராஜகுமாரி, பி.ஏ., எல்.எல்.பி.,
விருத்தாசலம்.

மேன்மைமிகு கடலூர் முதன்மை மாவட்ட நீதிமன்றம்
ஜ. ஏ. 468/2018 இன்
ஒ.எஸ். நெ. /2018
பெத்தல் டிரஸ்ட் அதன் டிரஸ்டி புவனேஸ்வரி, க/பெ. ராஜேந்திரன் நெ.1, மாரியம்மன்கோயில் தெரு, ராஜா நகர், செம்மண்டலம், கடலூர் -1
–மனுதாரர்
–எதிர்
ஃபுளோரன்ஸ் ரோஸ்மேரி (எ) ஷோபி, த/பெ. அகஸ்டின் பிரான்சிஸ் நெ. 3, விசாலி நகர் விரிவாக்கம், நந்தப்பட்டு, கோண்டூர் போஸ்ட், கடலூர்.
–2-ம் எதிர்மனுதாரர்
மேற்படி நெம்பரில் மனுதாரர், பெத்தல் டிரஸ்ட்டுக்காக இவ் வழக்கை நடத்த அனுமதி வேண்டி செக்ஷன் 92 RW151 சிபிசி படி மேற்படி கோர்ட்டில் மனு கொடுத்து அதன் பேரில் வாய்தா 09.01.2025 உள்ள விபரத்தை ஆர்.-2வுக்கு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. இதில் எதாவது ஆட்சேபணை இருந்தால் மேற்படி கோர்ட்டில் 09.01.2025 அன்று காலை சுமார் 10.30 மணி அளவில். ஆஜராகி தெரிவித்துக்கொள்ளவும்.
ஆர்.குருராஜ், B.Com., B.L.,
வழக்கறிஞர், கடலூர்.

கடலூர் மேன்மைமிகு மோட்டார் வாகன இழப்பு விபத்து வழக்கு சிறப்பு மாவட்ட நீதிமன்றம் எண் -2 கடலூர்
I A.NO. 166/2023 in
MCOP 3000 / 2018
கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம் வட்டம் கருவேப்பிலங்குறிச்சி கே.கே. நகர் என்ற முகவரியில் வசிக்கும் ராமசாமி மகன் நாராயணன் –மனுதாரர்
–எதிர்
1.சரோஜா, க / பெ. அன்பழகன்
2.அன்பு ரோஜா, த/பெ. அன்பழகன்
3. அன்பரசி, த/பெ.அன்பழகன்
4. அன்பழகி, த/பெ.அன்பழகன்
5.ஆனந்தி, த/பெ.அன்பழகன்
மேற்படியார்கள் முகவரி திரௌபதி அம்மன் கோயில் தெரு, சத்தியவாடி, விருத்தாச்சலம் வட்டம்.
-R3,R5,R6,R7,R8 எதிர்மனுதாரர்கள் மனுதாரர் வழக்கறிஞர் 1ம் எதிர்மனுதாரரின் வாரிசுதாரர்களுக்கு தெரிவிக்கும் அறிவிப்பு
கடந்த 30.3.2018 தேதியில் மனுதாரர் தங்களின் இறந்து போன தந்தை அன்பழகனுக்கு சொந்தமான TN.31.J.6716 என்ற எண்ணுள்ள பஜாஜ் சிடி100 இருசக்கர வாகனத்தில் பலத்த அடிபட்டு கொடுங்காயம் அடைந்தமைக்காக இழப்பீடுகோரி மனுதாக்கல் செய்து, மேற்படி வழக்கில் இறந்து போன அன்பழகனின் வாரிசுகளான தங்களை தரப்பினர்களாக சேர்ப்பதற்காக தாக்கல் செய்யப்பட்ட மேற்படி மனுவில் தாங்கள் ஆஜர் ஆவதற்கு 06.01.2025 தேதியில் வாய்தா வைக்கப்பட்டிருக்கிறது எனவே தாங்கள் மேற்படி தினத்தன்று சமூகம் கோர்ட்டில் காலை 10 மணி அளவில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தங்கள் தரப்பில் ஆட்சேபனை ஏதாவது இருப்பின் தெரியப்படுத்த வேண்டியது தவறினால் தங்கள் பெயரில் ஒரு தலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதனை இதன் மூலம் அறியவும்.
V. வெங்கடேசன், பி.ஏ., பி.எல்.,
M.யுவராஜா, பி.ஏ.,பி.எல்.,
மனுதாரர் வழக்கறிஞர்கள், கடலூர்.

மேன்மைமிகு கூடுதல் மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம்.
EP.203/24 in ARC 309/21
ஸ்ரீராம் பைனான்ஸ் கம்பெனி லிட்., Rep by கிளை மேலாளர் அருள்ராஜ், விழ